**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 348/2022 | Village | : | |
| Prosecution witness | : | PW- 3 | Taluk | : | |
| Name | : | **திரு.அப்துல் ரசாக்** | Occupation | : | |
| Father Name | : | திரு. அப்துல் காதர் | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 04.08.2025.**

**A1, A2, A3 present.**

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் திருச்சி ஏர்போர்ட் அருகே தற்போது வசித்து வருகிறேன் இதற்கு முன்பு பெரிய மிளகுபாறையில் வசித்தேன். சலவை கடை வைத்துள்ளேன். இறந்தபோனவர் என் தங்கையின் கணவர். அவர் பெயர் அப்துல் ரசாக். இரவு வீட்டில் கொள்ளை நடந்து மறுநாள் 7.4.2022 தேதி தகவல் கிடைத்தது. நாங்கள் பண்டாரவடைக்கு கிளம்பிபோனோம். வீட்டில்போய் பார்த்தபோது எனது தங்கை கணவர் இறந்துகிடந்தார். அவரது சடலத்தை பாபநாச அரசு மருத்துவமனைக்கு போலிஸார் கொண்டுபோய் விசாரணை முடித்து அடுத்தநாள் 08.4.2022 அன்று போலிஸார் ஆய்வு முடித்து பிரேதத்தை கொடுத்தார்கள். வாங்கி வந்து எங்கள் முறைப்படி அடக்கம் செய்தோம். போலிஸார் என்னை விசாரணை செய்தபோது நான் அங்கு இருந்தேன் என்னையும் விசாரித்தார்கள்.

1வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

பாபநாசம் அரசு மருத்துவமனையில் என்னை விசாரித்தபோது என்னை மீண்டும் விசாரித்தாரா என்றால் இல்லை. போலிஸார் என்னை விசாரித்தபோது இறந்த பிரேதத்தை மருத்துவமனைக்கு நாங்கள் எடுத்துபோனதாக சொல்லவில்லை என்றால் ஆமாம்.

2, 3வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஓம்/- ப .நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**